2022 ஏப்ரல் 22] [திரு. V. செந்தில்பாலாஜி]

கடிதம் எழுதியிருக்கின்றார். ஆக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், பல்வேறு மாநிலங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தச் சூழலையும் கவனத்தில்கொண்டு, மற்ற மாநிலங்களைப்போல தமிழகத்தில் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகப் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்ததன் அடிப்படையில்தான் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. எந்தவிதத் தடையும் இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது, இடையில் ஏற்பட்ட இரண்டு நாள் நிகழ்வு என்பது மத்தியத் தொகுப்பிலிருந்து மின்சாரம் கிடைக்கப் பெறாததால் ஏற்பட்ட நிலை மட்டுமே தவிர, வேறு எதுவும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவரைப் பொறுத்தவரையில், அவர்கள் சமூக வலைதளங்களில், குறிப்பாக, இன்னும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், AIADMK*–யின்* IT Cell*–ஐப் பயன்படுத்தி, இல்லாத ஒன்றை இருப்பதாக, அவர்கள் மக்கள் மத்தியில் ஒரு விஷமப் பிரச்சாரத்தை முன்னெடுக்க நினைக்கின்றார்கள். அதுவும் 796 மெகா வாட் மின் பற்றாக்குறை ஏற்பட்டபொழுது, 41 இடங்களில் மட்டும் அரை மணி நேரம் மின் விநியோகம் நிறுத்தம் செய்யப்பட்டதே தவிர, கூடுதலான நேரம் நிறுத்தப்படவில்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. தகவல் கோரல்

மதுரை மேற்கு தொகுதி, நேரு நகர், கழிவு நீரேற்றுக் கிணற்றில் விஷவாயு தாக்கி, மூன்று தொழிலாளர்கள் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ, நீங்கள் வெளிநடப்புச் செய்யவில்லையா? (குறுக்கீடு)*

***திரு. செல்லூர் கே. ராஜூ:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்துவிட்டு வந்து விட்டோம். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *மதுரை மேற்கு தொகுதியில் உள்ள நேரு நகரில் விஷவாயு தாக்கி, கழிவுநீர் அகற்றுகின்ற பணியில் ஈடுபட்டிருந்த நான்கு துப்புரவுப் பணியாளர்களில் மூன்று பேர் இன்றையதினம் மரணம் அடைந்திருக்கிறார்கள். ஒருவர் அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. முகம்மது ஷாநவாஸ் அவர்கள் இதுகுறித்து விதி 55–ன்கீழ் அறிவிப்பு அளித்திருக்கிறார்கள். இதுகுறித்துப் பேச வேண்டுமா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

***திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றுகின்ற இந்தக் கொடுமை சட்டப்படி தடை செய்யப்பட்ட ஒன்று. அப்படியிருந்தும் வாரத்திற்கு ஒரு முறையாவது இப்படிப்பட்ட துயரச் செய்தி வந்துகொண்டேயிருக்கின்றது. கடந்த வாரம் ஒரு செய்தி வந்தது. கடந்த மாதத்தில் பல செய்திகள் வந்தன. இந்த ஆண்டின் தொடக்கத்தில் இப்படிப்பட்ட துயரச் செய்திகள் வந்தன. இது முற்றிலுமாகத் தடை செய்யப்பட்ட ஒன்று. ஆனால், எப்படி நடக்கின்றது என்பதுதான் மிகப் பெரிய கேள்வியாக இருக்கின்றது. இப்படிப்பட்ட கழிவை அகற்றக்கூடிய செயலில் மனிதர்களை ஈடுபடுத்தக்கூடிய தனி நபர்களாக இருந்தாலும் சரி, நிறுவனங்களாக இருந்தாலும் சரி, அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஏற்கெனவே இயந்திரங்களைக்கொண்டு கழிவுகளை அகற்றக்கூடிய முறை இங்கே வந்திருக்கின்றது. சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அருமைச் சகோதரர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்கூட அவருடைய தொகுதியில் இந்தப் பணியைத் தொடங்கி வைத்தார். நாகப்பட்டினத்திலும் இயந்திரங்களைக் கொண்டு கழிவுகளை அகற்றும் முறையை நாங்கள் தொடங்கி வைத்தோம். ஆனாலும், அதன்பிறகும்கூட, இப்படிப்பட்ட துயரங்கள் தொடர்வது வேதனையாக இருக்கின்றது. அரசு இதில் மிக முக்கியமான ஒரு முடிவெடுக்க வேண்டும். ஏனென்றால், 2016–க்குப் பிறகு நடந்த மரணங்களைக்*

2022 ஏப்ரல் 22] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

கணக்கெடுத்துப் பார்த்தால், சென்னை அதில் முதலிடத்தில் இருக்கின்றது. உத்தரப்பிரதேசத்திற்குப் பிறகு தமிழ்நாடுதான் இப்படிப்பட்ட அதிகமான மரணங்களைச் சந்திக்கக்கூடிய ஒரு மாநிலமாக இருப்பது மிக மிக வேதனையாக இருக்கின்றது. நாம் எல்லா மாநிலங்களுக்கும் சமூக நீதியிலும், சமத்துவத்திலும், முன்னோடியான மாநிலம், வழிகாட்டக்கூடிய மாநிலம். இந்த மாநிலத்தில் இப்படியொரு நிலை இருப்பது வேதனை அளிக்கிறது. இந்த அரசு, சமத்துவ அரசு; சமத்துவபுரங்களைக் கட்டக்கூடிய அரசு நமது அரசு. எல்லோருக்கும் சமமான நீதியைத் தரக்கூடிய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் ஓர் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள் எனது அறையில் இதுகுறித்துப் பேசினார்கள். பேச விரும்புகிறீர்களா?* (குறுக்கீடு) *சுருக்கமாகப் பேசுங்கள்.*

திரு. கோ. தளபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மதுரை மாநகராட்சியில் இரவு 9 மணியளவில் தினக்கூலியாக வேலைப் பார்க்கக்கூடிய சிவகுமார் என்பவர் தன்னுடன் மூன்று பேர்களை அழைத்துக்கொண்டு பாதாளச் சாக்கடை என்று பத்து அடி விட்டமுள்ள கிணறு ஒன்று இருக்கின்றது. அது 28 அடி ஆழமுள்ள கிணறு. அந்தக் கிணற்றில் மோட்டார் பழுதுபார்க்க வேண்டும் என்று சொல்லி 15 அடி ஆழத்தில் இருந்த மோட்டாரைத் தூக்குவதற்காக இறங்கியிருக்கிறார். அப்போது தவறி விழுந்துவிட்டார். அவரைக் காப்பாற்றுவதற்காக மற்ற இரண்டு பேரும் இறங்கியிருக்கிறார்கள். எனவே, இது ஒரு விபத்துதானே தவிர, யாருடைய அனுமதியும் இல்லாமல்தான் அவர்கள் சென்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் குடும்பங்களுக்கு உரிய நிவாரண நிதி வழங்கிடுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களையும் மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி, மத்திய மண்டலம் வார்டு*

[திரு. கே.என். நேரு] [2022 ஏப்ரல் 22

எண் 70, நேரு நகர் பகுதியில் மாநகராட்சியின் கழிவு நீரேற்றுக் கிணறு-Corporation Sewage Disposal Tank ஒன்று உள்ளது. இதனை முழுமையாகப் பராமரித்து இயக்கிடும் பொறுப்பு VRG Construction Company என்ற தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 21–4–2022 அன்று இரவு 9 மணியளவில் மேற்படி நிறுவனத்தில் பணிபுரியும் 1) திரு. சிவக்குமார், த/பெ. திரு. அய்யணன், வயது 45, 2) திரு. சரவணக்குமார், த/பெ திரு. அன்புச்செழியன், வயது 34, 3) திரு. லட்சுமணன், த/பெ. திரு. கந்தசாமி, வயது 35 மற்றும் திரு. கார்த்திக் ஆகியோர் அங்குள்ள பழுதடைந்த மின்சார பம்ப் ஒன்றை சரிசெய்யச் சென்றுள்ளனர். ஆனால், இது தொடர்பாக அந்த வார்டு இளநிலை பொறியாளருக்கோ, மண்டல உதவி செயற்பொறியாளருக்கோ தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இந்நிலையில் மேற்படி கிணற்றில் இறங்கி மோட்டாரை ஆய்வு செய்யும்போது திரு. சிவக்குமார் அவர்களும், திரு. சரவணக்குமார் அவர்களும், திரு. லட்சுமணன் அவர்களும் ஒருவர் பின் ஒருவராக அங்கு இறந்திருக்கிறார்கள். அந்த தனியார் நிறுவனத்தின் மூலமாக அதைப் பராமரிக்கின்ற பணிகள் தரப்பட்டிருக்கின்றன. அவர்கள் இதுகுறித்து மாநகராட்சியின் ஆணையருக்கோ, இளநிலை பொறியாளருக்கோ தெரிவிக்காமல், இரவு 9 மணியளவில் அவர்களாகவே சென்று அந்தப் பணியைச் செய்கின்றபோது இந்த விபத்து நடைபெற்றிருக்கிறது. 4 பேர் அந்தப் பணிக்காகச் சென்றிருக்கிறார்கள், 3 பேர் உள்ளே இறந்திருக்கின்றார்கள்; வெளியில் இருந்த ஒருவர் சத்தம் போட்டதில், அங்கேயிருந்த காவல் துறை அதிகாரிகள், மாநகராட்சி அதிகாரிகள் எல்லோரும் விரைந்து சென்று பார்வையிட்டு, அந்த உடல்களை மீட்டு, மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். மேலே இருந்தவரும் சிகிச்சை அளிப்பதற்காக அனுப்பப்பட்டிருக்கிறார்.

பிற்பகல் 12–25

எனவே, Court–ன் உத்தரவுப்படி, யார் இதற்குக் காரணமோ அல்லது பொறுப்போ, அவர்களே அந்தத் தொகையைத் தர வேண்டும் என்றவுடன், இறந்த ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் 10 இலட்சம் ரூபாய் பணம் உடனடியாகத் தரப்பட வேண்டும். அதை அந்த நிறுவனத்திடமிருந்து பெற முடியாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து இறந்த ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் தலா 10 இலட்சம் ரூபாய் வழங்கச் சொல்லி, பிறகு அந்தப் பணத்தை நிறுவனத்திலிருந்து

2022 ஏப்ரல் 22] [திரு. கே.என். நேரு]

நீங்கள் திருப்பி வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இறந்த ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் 10 இலட்சம் ரூபாய் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) *இதுகுறித்து, அவர்கள்மீது காவல் துறையில் வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு விசாரணையில் இருந்து கொண்டிருக்கின்றது. அவர்கள் விஷவாயு தாக்கி இறந்தார்களா அல்லது மேலேயிருந்து கீழே தவறி விழுந்து இறந்தார்களா என்பதெல்லாம் தெரியாது. ஆனால், அதைப் பற்றி விசாரித்து வருகிறார்கள். காவல் துறையில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.*

எனவே, இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறக் கூடாது என்பதற்காகத்தான் இந்த முறை சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கழிவுநீர் அகற்றுகின்ற பணிக்குக் கூடுதலாக ஒவ்வொரு மாநகராட்சியிலும் இயந்திரங்கள் வாங்கப்பட வேண்டுமென்று நிதியொதுக்கி, ஒவ்வோர் இடத்திற்கும் அந்த இயந்திரங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. மாநகராட்சிக்குத் தெரிந்து செய்திருந்தால், இந்தச் சம்பவம் நடந்திருக்காது. இயந்திரங்கள் இருந்திருக்கும். அதன்மூலம் இந்தப் பணியைச் செய்திருக்கலாம். அவர்கள் நேரடியாக இந்தப் பணியைச் செய்யச் சென்றுவிட்ட காரணத்தால்தான் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது உரிய விசாரணையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து* (குறுக்கீடு) *இல்லை, நீங்கள் உட்காருங்கள், சொல்கின்றேன்.* (குறுக்கீடு) *உட்காருங்கள் சொல்கின்றேன்.* (குறுக்கீடு) *நீங்கள் உட்காருங்கள், சொல்கின்றேன்.* (குறுக்கீடு) *நீங்கள் உட்காருங்கள், சொல்கின்றேன்.* (குறுக்கீடு) *நீங்கள் உட்காருங்கள், உங்களுக்குப் பதில் சொல்கின்றேன்.* (குறுக்கீடு) *நீங்கள் அவசரம் என்று சொன்னீர்கள், அவசரம் கருதி அதை எடுத்தாகிவிட்டது.* (குறுக்கீடு) *தேவையான பதிலும் சொல்லியாகிவிட்டது. ஏற்கெனவே இதை* outsourcing *முறையில் 2018–ல் நீங்கள் கொடுத்ததால்தான் இப்படி ஒரு சம்பவம் நடந்தது என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதற்குப்பிறகும் இதில் என்ன கேள்வி இருக்கிறது?* (குறுக்கீடு) *சரி, கேளுங்கள்.*

[*2022 ஏப்ரல் 22*

திரு. செல்லூர் கே. ராஜூ: *ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் ஒரு தகவல். இந்த* VRG Construction Company *தான் மதுரை முழுவதற்கும்* contract *எடுத்திருக்கிறது. அந்த நேரு நகர் பகுதியில் கடந்த 3, 4 நாட்களாக கழிவுநீர் அகற்றப்படாததால் சாக்கடை ஆறாக போனதால், அங்கிருக்கின்ற பொறியாளர் சொல்லித்தான், இவர்கள் அவசரம் நிமித்தமாக, பணி செய்தார்கள். இந்த வார குடிநீர் காலையில் வரப்போகிறது. எனவே, உடனடியாக செய்யப் பணித்தார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், போதும்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *எனவே, அதற்குள் நீங்கள் இதை அகற்றிவிட வேண்டும் என்று சொன்னதால்தான். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, போதும். போதும்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *அவர்கள் கீழேயிறங்கியதால் அந்த விபத்து நடந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். இறந்த 3 பேருமே இளைஞர்கள், மிக மிக ஏழைகள். எனவே, இந்த நிதியைக் கூடுதலாக ஒதுக்கி, சம்பந்தப்பட்ட* Contractor*–ரிடமிருந்து வாங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் கருணைகூர்ந்து கூடுதலாக நிதியைப் பெற்றுக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்த 3 பேருமே ஏழைகள்.*

6. கவன ஈர்ப்பு

விராலிமலை தொகுதி, கோங்குடிப்பட்டி, துவான் குளம் நீர் கொள்ளளவை வரையறை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*